# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.

**S.C. No.120/2024**
**PW4**

| | | |
|---|---|---|
| Name | : | சூரியா |
| Father's Name | : | காந்தி |
| Village | : | பொய்யானந்தல் |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.07.2025.

Accused present.

**முதல் விசாரணை**

நான் பொய்யானந்தல் கிராமத்தில் வசித்து அங்காளம்மன் இந்தியன் ஆயில் பெட்ரோல் பங்கில் வேலை செய்கிறேன் . அந்த பெட்ரோல் பங்க் ஆர்ப்பாக்கம் கூட்ரோடில் உள்ளது. கடந்த 26.09.2023 அன்று நான் அங்காளம்மன் இந்தியன் ஆயில் பெட்ரோல் பங்கில் காலை 07.15 மணிக்கு வேலை செய்துகொண்டிருந்தேன். அப்போது மங்களம் போலிசார் அங்கு வந்து அங்கு நடந்த பிரச்சனை பற்றி விசாரணை செய்து அந்த இடம் சம்மந்தமாக ஒரு வரைபடம் தயாரித்தார்கள் . அந்த இடத்தில் என்னென்ன இருக்கிறது என்பது சம்மந்தமாக ஒரு பார்வை மகசர் தயார் செய்தார்கள். அதில் நானும், என்னுடன் வேலை செய்யும் கதிரவனும் கையொப்பம் செய்தோம். தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவதுதான் அந்த பார்வை மகசர் . அது **அ.சா.ஆ.2.** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அங்காளம்மன் பெட்ரோல் பங்க் ஆர்ப்பாக்கம் கூட்ரோடில் உள்ளது . என்னை போலிஸ் விசாரணை செய்தபோதும் அப்படிதான் சொன்னேன் . போலிசார் படம் வரைய வேண்டும் என்று என்னை அழைத்துச்சென்றார்களா என்றால் ஆமாம் . போலிசார் எழுதிய பேப்பரில் என்ன எழுதினார்கள் என்று எனக்கு தெரியும் . போலிசார் தயார் செய்த வரைபடத்தில் என்ன வீடுகள் , கடைகள் குறிப்பிட்டார்கள் என்று எனக்கு தெரியும் . அங்காளம்மன் பெட்ரோல் பங்கிற்கு மேற்கு பக்கம் அர்ச்சனா ஸ்வீட் கடை உள்ளது . என்னிடம் படம் வரைந்தபின்பு கையொப்பம் பெற்றவர் ஒரு ஆண் போலிசார் . இந்த வழக்கில் காயம்பட்ட பெரியசாமியை எனக்குதெரியாது. பார்வை மகசரில் உள்ள கையொப்பம் நான் காவல் நிலையத்தில் போடவில்லை. போலிசார் கேட்டுக்கொண்டதன்பேரில் நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான்.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B. C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.